ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1613 - 2009 ජූලි මස 31 වැනි සිකුරාදා - 2009.07.31
1613 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 945 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 947 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 949 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 940 | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***– இவ்வர்த்தமானியின் பகுதி V இல் புத்தகப் பட்டியலொன்று (ஏப்பிறல் – யூன், 2006) ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, ஒகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூலை மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## பதுளை பிரதேச செயலாளரின் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2010

கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையில் 2010, சனவரி 01 ஆந் திகதி முதல் 2010, திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதியும் 207 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வது பற்றிய விதிகளுக்கும் தற்போதைய நடைமுறையில் உள்ள கலால் விதிகள் அனைத்திற்கும் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கும் அமைவாக 2009.08.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கள்ளுத் தவறணையினை குத்தகைக்கு பெற்றுக் கொள்ள முன்வரும் எவரும் எப்பிரதேச செயலாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள கூடியதான விண்ணப்பப்படிவத்தில் முறையாக தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை இங்கு கீழ் உள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வைப்புப் பணத்தினை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுடனும் கள்ளு விற்பனைக்கான நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட பெறுமதி சான்று பத்திரத்துடனும் பொறியிடப்பட்டதும் மேல் இடது பக்க மூளையில் ''பதுளை இல. 01 கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம்'' எனத் தெளிவாக எழுதப்பட்டதுமான கடித உறையிலிட்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை பொறுப்பேற்கும் கடைசி நேரத்திற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் போடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரத்தில் செய்யப்படும் மாற்றங்கள் திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிரில் கேள்விப்பத்திரக்காரர் தமது ஒப்பத்தையிடுவதன் மூலம் அவற்றை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திர முடிவுத் திகதியான 2009.08.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு எல்லா கேள்விப்பத்திரதாரர்களும் இவ்வலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப் பத்திரத்தையுமோ காரணங்காட்டாது நிராகரிக்கும் தத்துவம் பதுளை பிரதேச செயலாளருக்குண்டு.

6. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர் எவர் என்பதனை அறிவித்தவுடன் அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக அக்கேள்விப்பத்திரதாரர் இரண்டு மாத வாடகைக்கு குறையாததாகத் தீர்மானிக்கப்படும் தொகையினை பிணைப்பணமாக பதுளை பிரதேச செயலாளருக்கு செலுத்தி குத்தகை விற்பனைக்காக நிபந்தனைகளுக்கு ஒப்பமிடுதல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரம் தொடர்பாக வேறு விபரங்கள் தேவையாயின் அவற்றை பதுளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

8. தகைமையான கேள்விப்பத்திரம் எதுவென்பது என்னால் பிரகடனப்படுத்தப்பட இயலாதுவிடின், மீள் விற்பனைக்காக 2008.10.09 ஆந் திகதி காலை 10.30 மணி வரை இக்கேள்விப்பத்திரமானது மீண்டும் கோரப்படும்.

ஆர். எம். எஸ். டி. ரத்நாயக,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2009.07.10.

### பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணை - 2010
(2010.01.01 முதல் 2010.12.31 வரை)

| தவறணையின் பெயரும் விலாசமும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய உள்ளூ ராட்சிப்பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி பத்திர வைப்புத் தொகை | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திரம் கோரும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| பதுளை இல. 01 கள்ளுத் தவறணை | பதுளை | பதுளை மாநகர சபையின் இல. 06 கொண்ட கொட்டுவ எனும் பிரதேசம் அரச காணி | மு. ப. 11. 00 பி. ப. 5.00 மணிவரை | பி. ப. 2.00 பி. ப. 8.00 மணிவரை | ரூ. 5,000 | 2009.08.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை | தகைமையான கேள்விப் பத்திரம் பிரகடனப்படுத் தப்படவில்லையாயின் 2009.10.09 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை மீளவும் கோரப்படும் |

7-757

## நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2010

2010, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2010, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் கள்ளுத் தவறணையை சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளுவிற்கும் சட்டங்களுக்கமைய 2009, ஓகத்து 24 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுக் குத்தகை வாங்க முன் வருபவர் சகல பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை இவ்வலுவலகத்திற்கோ, பிரதேச செயலகத்திற்கோ செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை, மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக்கொண்ட பெறுமதிச் சான்றிதழுடன் காகித உறையிலிட்டு முத்திரை குத்தி இடப்பக்க மேல் மூலையில் தான் விலை கோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ இப்பிராந்திய செலயகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்க வழி வகுக்கலாம்.

3. கேள்விப்பத்திரம் நிரப்பும் போதுண்டாகும் சகல திருத்தங்களும் கேள்வியாளரினால் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்த வேண்டும். இப்படியில்லாத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியான 2009, ஓகத்து 24 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப் பத்திரத்தையோ எல்லாப் பத்திரங்களையுமோ நிராகரிக்கும் பொறுப்பு நாரம்மல பிரதேச செயலகத்தை சார்ந்ததாகும்.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அத்திகதி பி. ப. 3.00 மணிக்கு முன் நாரம்மல பிரதேச செயலாளர் கூறும் தொகையை வைப்புப் பணமாக செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.

7. 2010 ஆம் வருடத்திற்காக தற்போது கள்ளுத் தவறணை உள்ள இடங்கள் தரப்படும் என உறுதி அளிக்கப்படமாட்டாது. தற்போதைய நிலையங்கள் 2010 ஆம் வருடத்திற்காக பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நாரம்மல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

8. 2009.08.24 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாத விடத்து 2009.10.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறு ஆய விற்பனை இதே இடத்தில் நடைபெறும்.

9. மேலதிக விபரங்களை இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எல். எச். நம்யசிறி,
பிரதேச செயலாளர்,
நாரம்மல.

பிரதேச செயலகம்,
நாரம்மல,
2009.07.10.

**அட்டவணை**

| தொடர் இல. | பகுதி | கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடவேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|
| 01. | நாரம்மல | 2009.08.24<br>மு. ப. 10.30 | ரூபா 1,000 | மு. ப. 11.00<br>பி.ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 |

7-766

## இரத்தினபுரி மாவட்டத்தில் பின்னவலை இலக்கம் 02 ஆம் கள்ளுத்தவறணை ஏலவிற்பனை - 2010

2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து 2010 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதிவரையுள்ள காலஎல்லைக்குள் கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவை கீழுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

(i) 1982.08.20 ஆந் திகதியுடைய 207 ஆம் இலக்கத்தின் கீழான அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏலவிற்பனையின்படியும்,

(ii) மதுவரிச் சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான விற்பனை உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும்.

2. எல்லா விலைமனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கி அல்லது மாவட்ட செயலகத்தில் பணம் செலுத்தியதற்காக பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். பின்னவல இல. 02 கள்ளுத்தவறணைக்காக 1,500 ரூபாவைக் கொண்ட தொகை செலுத்தப்பட வேண்டும்.

3. இலங்கையில் எல்லா பிரதேச செயலகங்களிலும் கொழும்பு மதுபான ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள குறிப்பிட்ட படிவத்தில் எழுதப்பட்ட விலைமனு உரையை ஒட்டி முத்திரைக்கு இடப்பக்க மேல் மூலையில் "பின்னவலை இல. 2 கள்ளுத் தவறணைக்கான விலைமனு" என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

4. எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலைமனு சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒருவருக்கு ஒரு கள்ளுத்தவறணைக்கு மேலாக விலைமனு கோரப்பட முடியாது. ஒரு கள்ளுத்தவறணைக்காக 5 பேருக்கும் மேலாக விண்ணப்பம் கோரப்பட முடியாது. விலைமனுவில் குறிப்பிட்டுள்ள பணம் இலக்கத்திலும் எண்ணிலும் அறிவிக்க வேண்டும். விலைமனுக்காரர் செய்யும் எல்லா விலைமனுக்களிலும் அவரின் கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும். எல்லா விலைமனுக்களும் சாட்சியாளர் இருவரினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும். நிபந்தனைகளுக்கு உட்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

6. வெற்றிபெற்ற விலைமனுக்காரர் விலைமனுவை வாங்கியதாகக் கருதப்பட்டு பின் கள்ளுத்தவறணை ஏற்கப்படும். பத்திரத்தில் கையொப்பமிட்டு இம்புல்பெ பிரதேச செயலாளர் குறிப்பிடப்படும் பணத்தைப் பிணைப்பணமாக செலுத்தப்பட வேண்டும்.

7. 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் காலம் முடிவடைந்தவுடன் விலைமனுப் பெட்டி திறக்கப்படும். எல்லா விலைமனுதாரரும் இங்கு கூறப்பட்ட நேரத்தில் இம்புல்பெ பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

8. எந்தவொரு காரணமும் காட்டாது எந்தவொரு விலைமனுவையும் அல்லது மனுக்களையும் சொந்த விருப்பின் பெயரில் நிராகரிக்கும் அதிகாரம் இம்புல்பெ பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

9. குறிப்பிட்ட தினத்தில் இந்த கள்ளுத்தவறணை விற்கப்படாவிட்டால் அதன் மீள்விற்பனை 2009.10.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும் அன்றைய தினம் விலை மனு சமர்ப்பித்தலானது இந்த விலைமனு வர்த்தமானி அறிவித்தலின்படி குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ஏற்றுக்கொள்ளப்படும்.

10. 2010 ஆம் ஆண்டிற்காக தற்போது கள்ளுத்தவறணையை நடாத்திக்கொண்டிருக்கும் இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் கூற முடியாது. விலைமனுக்காரரால் குறிப்பிட்ட பிரதேசத்தில் கட்டிடம் ஒன்றை (இடம்) தேடிக்கொள்ளலாம். அந்தக் கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அலுவலகத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக்கொள்ள உத்தரவுப்பத்திர அதிகாரி உடன்பட மாட்டார் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

எம். எம். குணசிங்க,
பிரதேச செயலாளர்,
இம்புல்பெ.

இம்புல்பெ பிரதேச செயலகம்,
இம்புல்பெ,
2009.07.09.

### அட்டவணை

| கள்ளுத்தவறணையின் பெயர், இலக்கம் | பிரிவு | அமைந்துள்ள பிரதேசம் | திறந்திருக்க வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளும் நேரம், முடியும் நேரம் |
|---|---|---|---|---|
| பின்னவலை கள்ளுத்தவறணை இல. 02 | கடவத்த கோரளை | பின்னவலை நகரம் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 02.00 மணி வரை பி. ப. 05 மணியில் இருந்து பி. ப. 08.00 மணிவரை | 2009.08.27 ஆந் திகதி பி. ப. 10.30 மணி வரை |

7-771

---

### ஹம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் கள்ளுத் தவறணை குத்தகை - 2010

ஹம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் முதலாம் இலக்க கள்ளுத் தவறணையில் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை சில்லறையாக கள்ளு விற்கும் உரிமை வழங்குவதற்கு நடைமுறையில் இருந்து வரும் விதிகளுக்கு அமையவும் 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகைக்கு அமையவும் கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக 5,000 ரூபாவை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்தி பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தமது சொந்தப் பெயரில் இருக்க வேண்டும். முகவர்கள் அல்லது இலங்கை பிரசைகள் அல்லாதவர்களின் மூலமாகவோ அல்லது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத் தவறணை குத்தகை சட்டங்களுக்கு அமைய அருகதையற்றவர்களின் கேள்விப்பத்திரம் அனுமதிக்கப்பட மாட்டாது.

4. ஒருவர் ஒரு கேள்விப்பத்திரத்திற்கு அதிகமாக சமர்ப்பித்தல் ஆகாது. அத்துடன் 5 பேருக்கு மேற்பட்டோர் சேர்ந்து கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் ஆகாது.

5. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் "ஹம்பாந்தோட்டையின் 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம் - 2010" என தபால் உறையின் மேல் மூலையில் எழுதப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் சேர்க்கப் பட்டோ அல்லது தபாலிலோ 2009.08.10 ஆந் திகதி மு. ப. 10 மணிக்கு முன்பாக ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் கோருபவர்கள் அவைகள் மூடப்படும் நேரத்தில் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

6. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் யார் என்பதை அறிந்ததும் அவர் ஒப்பந்த விற்பனை விதிகள் அடங்கிய கேள்விப்பத்திரத்தில் கைச்சாத்திட்டு ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளரினால் குறிக்கப்படும் பணத்தைப் பிணைப்பணமாக கட்ட வேண்டும்.

7. ஒரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ ஏற்கவோ அல்லது மறுக்கவோ ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு உரிமை உண்டு.

8. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதியான 2009.08.10 மாற்றப்பட்டால், மறுபடியும் கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி 2009.10.06 என கருதப்படல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களுக்கு ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அவர்களிடம் விண்ணப்பித்து தெரிந்து கொள்ளலாம்.

கனேச அமரசிங்க,
பிரதேச செயலாளர்,
ஹம்பாந்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹம்பாந்தோட்டை,
2009.07.10.

**அட்டவணை**

**ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை - 2009**

| கள்ளுத் தவறணை | பிரிவு | எல்லை | கேள்விப் பத்திரம் முடியும் திகதி | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஹம்பாந்தோட்டை | ஹம்பாந்தோட்டை | 2009.08.10<br>மு. ப. 10.00 | மு.ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 |

7-890

---

**குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணைகள் குத்தகை விற்பனை - 2010**

2010, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2010, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலவரையறைக்குள் பின்வரும் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் முத்திரையிடப்பட்டு அடைக்கப்பட்டுள்ள கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனவு செய்வதற்கான சம்பூர்ணமான உரிமைகளை விலைக்கு கொள்வனவு செய்வதன் பொருட்டு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் மதுவரி ஆணையாளரினால் பிரசுரிக்கப்பட்ட சாராயத்தினை விற்பனை செய்வதன் நிபந்தனைகளை தற்போது நடைமுறையிலுள்ள சகல மதுவரி நிபந்தனைகளுக்கும் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டவாறு 2009, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி மு. ப.10.30 மணி வரை குருநாகல் பிரதேச செயலாளரினால் கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கள்ளு பங்கு பிரிவு விலைகளை கொள்வனவு செய்வதற்காக முன்வருவோர் உரிய கேள்விக்கோரல் படிவங்களை முறையாக பூர்த்தி செய்து இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் பிறப்பிக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தை செலுத்தி ஏதாவது ஒரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பணம் செலுத்தும் கிளையில் (சரப்) பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினையும் மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனவு தொடர்பான நிபந்தனைகளில் காட்டப்பட்டிருக்கும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்களையும் கடித உறையினுள் இட்டு அதனை முத்திரையிட்டு அதன் இடது மேல் மூலையில் தாம் கேள்வி கோரும் கள்ளுத் தவறணையின் இலக்கத்தினையும் பெயரினையும் எழுதி அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் கடைசி நேரத்துக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைப்பதற்கோ அல்லது இப்பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இது தொடர்பாக வைக்கப்பட்டிருக்கும் கேள்விக்கோரல் பெட்டியில் போடுவதன் மூலம் குருநாகல் பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்ய முடியும். குறித்த கேள்விக்கோரல் படிவங்களை சகல பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்விகோரல் நபர்களினால் கேள்விக்கோரல் படிவம் பூரணப்படுத்தப்படும் போதும், கேள்விப் படிவங்களில் திருத்தப்படும் சகல திருத்தங்களையிட்டு அவரது முழு கையொப்பத்தினை இடுவதன் மூலம் சான்றுபடுத்தப்பட வேண்டும். அவ்வாறு திருத்தமைப்பு செய்யப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.

கேள்விகோரல் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 2009, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஆகும். சகல கேள்விதாரர்களும் இப்பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

எந்தவொரு காரணமும் முன்னறிவித்தல் செய்யப்படமாட்டாது. கேள்விப்படிவத்தை அல்லது சகல கேள்விப் படிவங்களும் நிராகரிப்புச் செய்யும்உரிமை குருநாகல் பிரதேச செயலாளரைச் சாரும்.

தனியான உரிமையினை பெற்றுக்கொண்ட நபர் என தெரிவுச் செய்யப்பட்டதும் சிறந்த கேள்விதாரர் என தெரிவு செய்யப்பட்டதும் அவர் குறித்த திகதியில் பி. ப. 2.00 மணிக்கு குருநாகல் பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் தொகையினை பாதுகாப்பு பிணை வைப்பாகச் செலுத்தி விற்பனவு நிபந்தனைகளில் கையொப்பம் இடப்படல் வேண்டும்.

2009 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகள் வைக்கப்பட்ட இடத்தில் அல்லாது 2010 ஆம் ஆண்டுக்கென தெரிவு செய்யப்பட்ட புதிய இடத்தில் தவறணைகள் நிறுவப்படல் வேண்டும். அதனையிட்டு கேள்விக்கோரல் வெளிக்காட்டப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் சிறந்த கேள்விதாரரினால் அவ்விடத்தைவிட்டு குருநாகல் பிரதேச செயலாளரிடமிந்து அனுமதியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். 2009, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி குத்தகை விற்பனை தொடர்பாக தகுந்த கோரல்கள் இல்லாதிருப்பின் 2009.10.16 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் கள்ளுத் தவறணைகள் குறித்த இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் குருநாகல் பிரதேச செயலாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

டபிள்யு. எம். ஜயவர்தன,
பிரதேச செயலாளர்,
குருநாகல்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
குருநாகல்,
2009, யூலை 16.

**குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகள் - 2010**

| இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை திறக்கப்பட வேண்டிய பிரதேசம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்வி மூடப்படும் திகதியும் நேரமும் | தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | தவறணை மூடப்பட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|---|
| இலக்கம் 02 குருநாகல் | வேஉட ஹத்தபத்து | நகரப் பிரிவு இல. 1, 3, 10 முதல் 12 வரை | ரூபா 3,000 | 2009.08.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 5.00 மணி வரை | பி. ப. 2.00 முதல் பி. ப. 8.00 மணி வரை |

7-937

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைத்தல் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : சார்க் கொன்பெடரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இல. : பீவீ 68131
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.06.17
பதிவுசெய்யப்பட்ட கம்பனியின் அலுவலக முகவரி : இல. ஜீஏ 202, வித்யானந்த மாவத்தை, அம்பாறை

செயலாளர்கள்.

7-814

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைத்தல் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : ப்ளூஷிப் குரூப் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இல. : பீவீ 68092
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.06.12
பதிவுசெய்யப்பட்ட கம்பனியின் அலுவலக முகவரி : இல. 110, நாவல வீதி, நுகேகொடை

செயலாளர்கள்.

7-815

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைத்தல் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : என்வோ டோட்டல் ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இல. : பீவீ 68224
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 1067/ 10, பொத்துவராவ வீதி, மாலபே
கூட்டிணைத்தல் திகதி : 2009, யூன் 25

பிரதீப் சமரதுங்க,
கம்பனிச் செயலாளர்.

7-816

**கம்பனி பதிவுசெய்தல் தொடர்பான அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) இற்கிணங்க பின்வரும் கம்பனி, கீழ்வரும் பெயர், முகவரியின்கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதியால் பதிவுசெய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : நவலோக ஷங்டொங் அலுமீனியம் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும் திகதியும் : பீவீ 68042 ; 2009.06.09
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 115, சேர். ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 02

பணிப்பாளர்,
கன்சல்டன்ட் என்ட் செகடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

தொலைபேசி இல. : 2689618

7-841

பிழை திருத்தம்

**தனியார் கம்பனியாக மாற்றப்பட்டதன் விளைவான பெயர் மாற்றம்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2008, மே 14 ஆந் திகதிய "தினகரன்" பத்திரிகையில் வெளியிடப்பட்ட பகிரங்க அறிவித்தலில், கம்பனியின் இலக்கம் பீவீஎஸ் 2272 என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரியான விபரம் பின்வருமாறு :

கம்பனியின் பெயர் : ஹேகெம் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீஎஸ்/பீபிஎஸ் 2772 (புதிய இல. பீபி 738)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2009, யூலை 10.

7-843

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைத்தல் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : அமராவதி லங்கா (தனியார்)
கம்பனி இல. : பீவீ 68323
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2009.07.03
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 02, மைல் போஸ்ட் அவெனியூ, கொழும்பு 03

அமல்கமேற்றற் மனேஜ்மன்ற் சேர்விசஸ் (தனியார்),
செயலாளர்கள்.

இல. 96-2/2, புரொன்ட் வீதி,
கொழும்பு 11,
2009, யூலை 10.

7-866

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

அறிவித்தல்

**சொனிக் இம்பெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்**
**(பிவி 68358)**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்படி மேற்படி கம்பனியானது 2009, யூலை 8 ஆந் திகதி கூட்டிணைப்புச் செய்யப்பட்டு, இல. 41 7/2, மகா வித்தியால மாவத்தை, "கோல்டன் டவர் அப்பாட்மன்ட்ஸ்", கொழும்பு 13 இல் பதிவுசெய்யப் பட்ட அலுவலகம் அமைந்துள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

பி. டி. ஓ. பிஸ்கோன் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 65/2, சேர். சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 02,
2009, யூலை 13.

7-883

---

**நிர்ணயிக்கப்பட்ட மூலதனத்தை குறைப்பதற்கான அறிவித்தல்**

இலங்கையில் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டு, பி. வி. 12678 ஐ பதிவிலக்கமாகவும், இல. 30/51, லோங்டன் பிளேஸ், கொழும்பு 7 ஐ பதிவுசெய்யப்பட்ட அலுவலகமாகவும் கொண்ட "எம்எஸ்எச் பெக்கேஜிங் இன்டஸ்றீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது, கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, 2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணியளவில் இல. 78, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 7 இல் நடைபெறவுள்ள விசேட பொதுக் கூட்டத்தில் பின்வரும் விசேட தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் தனது மூலதனத்தை குறைக்கவுள்ளது என்பதனை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் பிரிவு 59 இற்கமைவாக இப்பொது அறிவித்தல் மூலம் இத்தால் அறியத்தருகின்றது.

"கம்பனியின் நிர்ணயிக்கப்பட்ட மூலதனமானது எட்டு மில்லியன் ரூபா (ரூ. 8,000,000) சாதாரண பங்குகளை ஐநூற்றிருபது மில்லியன் ரூபாவுக்கு (ரூ. 520,000,000) (ஒரு பங்கு ரூ. 65 எனும் விலையில்) கம்பனியால் வாங்கப்படுவதன் மூலம் நூறு மில்லியன் ரூபாவிலிருந்து (ரூ. 100,000,000) இருபது மில்லியன் ரூபாவாக (ரூ. 20,000,000) குறைப்பதற்கான தீர்மானமானது இத்தால் நிறைவேற்றப்படுகிறது."

சபையின் கட்டளைப்படி,

கோ-சேர்வ் (பிறைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

7-915

**பகிரங்க பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ் கம்பனியாக்கப்பட்டதாக 2009.07.02 ஆந் திகதி முதல் மாற்றப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : குலோபலயிஸ் ரினிவபல்ஸ் இனோவேசன் பார்ட்னர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 68298
பதிவுத் திகதி : 2009.07.02
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 10ஏ, டிலேனியா வீதி, பொரலை, கொழும்பு 08

ஸ்தாபகர்/பணிப்பாளர்.

7-911

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என நாம் இத்தால் அறிவிக்கின்றோம்–

(1) பெயர் : நியூ அருணாஸ் ஸ்டீல் அன்ட் செரமிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 67963
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 84, பிரதான வீதி, பண்டார வளை

(2) பெயர் : டினுமின் ஹோம்கெயார் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 68237
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 43/8சி, டாக்டர் ஏ. டி. மாட்டின் மாவத்தை, பிரிவெனா வீதி, பொரலஸ்கமுவ

வியாபார முகாமைத்துவச் சேவைகள் லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

7-914

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (2) இற்கமைய, லங்கா ஒரிக்ஸ் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஆனது "கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" என 2009, யூலை 10 ஆந் திகதியன்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : கெப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 12905
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 42, சேர். மொஹமட் மாக்கன் மார்க்கர் மாவத்தை, கொழும்பு 3

எம். ஆர். ப்ரேலிஸ்,
பணிப்பாளர்,
கப்பிட்டல் ட்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

7-946

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.*

*(1) கம்பனியின் பெயர் : வரையறுக்கப்பட்ட சீஸ்டீல் என்ஜினியரிங் (தனியார்) நிறுவனம்*

*(2) கூட்டிணைக்கப்பட்ட திகதி : 03.06.2009*

*(3) கம்பனி பதிவிலக்கம் : பீவீ 67989*

*(4) பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 37/6, நாகொல்லை வீதி, கேகாலை*

எம். பி. ரஞ்சனி,
செயலாளர்,
வரையறுக்கப்பட்ட சீஸ்டீல் என்ஜினியரிங் (தனியார்) நிறுவனம்.

7-964

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் அந்நிய மதுபானத் தவறணை குத்தகை விற்பனை - 2010

2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணைகளுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாகவே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட கடித உறையில் இடதுபக்கத்தின் மேல் மூலையில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் பின்வருமாறு -

"......................................... இலக்கம் கொண்ட ......................................... அந்நிய மதுபானத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2009.08.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். அல்லது மேற்குறித்த திகதி, நேரத்திற்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.03.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபான குத்தகை நிபந்தனைகளுக்கமைவாக அமைதல் வேண்டும்.

5. 2009.08.07 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் சகல கேள்விப்பத்திரதாரர்களும் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கமைய இதுவரை குத்தகை விற்பனை செய்யப்படாமல் ஏதாவது தவறனை இருப்பின் அவை 2009.10.05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீள் விற்பனைக்கு விடப்படும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேசச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 032-2223205)

**அட்டவணை**

| பகுதி | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் திகதியும் | கேள்விப்பத்திரம் முடிவடையும் நேரமும் | தவறணை மூடும் நேரம் திகதியும் | வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| சிலாபம் | இல. 7, பிடிபன தெரு, சிலாபம் | 2009.08.07 மு. ப. 10.30 | 2009.10.05 பி. ப. 05.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 500 |
| சிலாபம் | இல. 6, பிடிபன தெரு, சிலாபம் | 2009.08.07 மு. ப. 10.30 | 2009.10.05 பி. ப. 05.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 1,500 |

யூ. எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2009.07.13.

7-840

## நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணைகள், வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள் குத்தகை விற்பனை – 2010

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1983 ஆம் வருடத்திலும் அதற்குப் பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளு, வெளிநாட்டு குடிவகை தவறணைகள் உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2010 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்குக் கொடுத்தல்.*

இக்காலப்பகுதியில் கள்ளு, வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள் (தானிய வகைகளைக் கொண்டு இந்நாட்டில் தயாரிக்கப்படும் குடிவகை உட்பட) தனி நபருக்காக சில்லறை விற்பனை குத்கைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2009.08.31 ஆந் திகதி அட்டவணையில் குறிப்பிட்ட நேரம்வரையும் கேள்விப்பத்திரம் நுவரெலியா பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) இத்தீவின் பிரதேச செயலாளர் செயலகத்தில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச்சீட்டினை இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்விக்காரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்போது கள்ளுத்தவறணைகளினது வெளிநாட்டுக் குடிவகை குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கேள்விக்காரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்திற்கொள்ள வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம் கையொப்பமிடும் சாட்சிகளது ஆளடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு கேள்விக்காரர்களும் தமது அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச்செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் தவறணைக்கான இலக்கத்தையும் குறிப்பிட்டு நுவரெலியா பிரதேச செயலாளர் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் சமர்ப்பிக்கவேண்டிய கால எல்லைக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவதற்குள் பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனைத் தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன் நுவரெலியா பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்டு மூன்று மாத விற்பனைக்கு குறையாத பிணைப்பணமாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப்பணம், நுவரெலியா இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக்கணக்கில் எனது பெயரால் வைப்புச்செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும்.

7. நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2009.10.26 ஆந் திகதி மு. ப. 10.30 மணியளவில் மீள விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

காமினி இலங்கரத்ன,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2009.07.14.

**அட்டவணை**

**வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள்**

| தவறணையின் பெயர் | தவறணை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதி | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதி நேரம் | கேள்விகள் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| இல. 01, நுவரெலியா | நுவரெலியா மாநகர சபை இல. 06 பிரிவிற்குள் | 2009.08.31 | மு. ப. 10.30 | ரூ. 5,000 |

7-887

# ஏல விற்பனைகள்

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – மஸ்கெலியா கிளை**

